# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்

# O.S.No.357/2010

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் நாள் வாதியின் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தால் ஆணையிட்டு 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சுரேஷ் இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | **கருணாகரன்** | தொழில் |
| தந்தை பெயர் | **கமலக்கண்ணன்** | கிராமம் |
| வயது | 72 | வட்டம் |
| நேரம் | 11.05 | |

**வா.சா.1 குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக நாகமுத்து என்ற வழக்கறிஞரை வைத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் நாகமுத்து வழக்கறிஞரை வைத்து பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் 1998 முதல் கூல்டிரிங்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறார் என்று தெரிவித்திருக்கிறேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கிரையம் வாங்கியபோது தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி கூல்டிரிங்ஸ் கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் 1ம் பிரதிவாதியை அந்த இடத்தில் இருந்து காலி செய்து கொடுக்கும்படி எனக்கு கிரையம் கொடுத்தவரை கேட்டேனா என்றால் கேட்டேன் அவர் 1ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றுள்ளதாகவும் அதனால் அவர் அங்கு கடை வைத்து நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். அதனால் என்னை காலி செய்து கொள்ள சொல்லி தெரிவித்தார். நான் இடத்தை கிரையம் வாங்கிய

பின்பு நிலத்தை சர்வேயர் வைத்து அளவீடு செய்தபோது கூல்டிரிங்ஸ் கடையின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு என்று அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. மொத்த இடத்தையும்தான் நான் அளந்து பார்த்தேன். அந்த கூல்டிரிங்ஸ் கடைக்கு கதவு எண் உண்டா என்றால் இல்லை. கூல்டிரிங்ஸ் கடைக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது அதை நான்தான் வாங்கினேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அறிக்கை மற்றும் வரைபடத்தில் கூல்டிரிங்ஸ் கடைக்கு கதவு எண் 27 என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போதும் 1ம் பிரதிவாதி சங்கர் பெயரில்தான் மின் இணைப்பு எண் வருகிறது என்றால் சரியல்ல நான் என்னுடைய பெயருக்கு மாற்றிவிட்டேன். நான் சந்தன்பாலாவிற்கு சுமார் 2400 சதுரடி கிரையம் கொடுத்தது போக மீதம் உள்ள இடத்தை வேறு யாருக்காவது கிரையம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மகனுக்கு அந்த இடத்தை அனுபவிப்பதற்காக கொடுத்தேன். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது ஷார்மிலா என்பவருக்கு அதிகார முகவர் பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. ஜகதீசன் என்பருக்கு என் கடையில் வாடகைக்கு இருந்தார். அவர் எனக்கு உறவினார் இல்லை. ஜகதீசன் என்பவருக்கு நானும் எனது மனைவி ருக்குமணியும் சேர்ந்து 25.04.2012ல் 2100 சதுரடி கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் ஞாபகத்தில் இல்லை. 24.08.2016 நான் ஷார்மிலா என்பவருக்கு அதிகாரம் கொடுத்து ரஜ்சித்குமார் என்பவருக்கு 300 சதுரடி கிரையம் கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நானும் எனது மனைவி ருக்குமணி அம்மாளும் சேர்ந்து தெளதிரி என்பவருக்கு 1930 சதுரடி 15.09.2020 அன்று செட்டில்மேன்ட் எழுதி

வைத்தோம் என்றால் ஞாபகம் இல்லை. ( **மேற்கண்ட சங்கதி சம்பந்தமாக பிரதவாதியின் எதிர் வழக்குறையில் எந்த விஷயமும் சொல்லப்படவில்லை என்பதால் மேற்கண்ட கேள்விக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)** தாவா சொத்தில் உள்ள கூல்டிரிங்ஸ் கடையானது வடக்கு தெற்கு 30 அடியாகவும் கிழக்கு மேற்கு 80 அடியாகவும் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கூல்டிரிங்ஸ் கடையானது 1970ல் இருந்து அந்த இடத்தில் இருந்து வருகிறது என்றால் நான் மொத்த இடத்தையும்தான் கிரையம் வாங்கினேன். அந்த இடத்தில் 1ம் பிரதிவாதியின் தந்தை சிதம்பரம் 1970லேயே கூல்டிரிங்ஸ் கடையை தொடங்கி வைத்து நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. அந்த இடம் ராமகிருஷ்ணன் நாயுடு அவர்களின் குடும்ப பெயரில் இருந்தது. நான் 7100 சதுரடி கிரையம் பெரும்போது அந்த இடத்திற்கு கதவு எண் இருந்ததா என்றால் இருந்தது கதவு எண் 27 ஆகும். நான் பிரதிவாதிகளுக்கு எதிராக தடை உத்தரவு கேட்டு எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சொத்து எனக்கு வரவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்தேன். நான் சங்கர் மற்றும் செல்விக்கு எதிராக தான் பிரச்சனை உள்ளது என்றபோது எதற்காக மொத்த சதுரடிகாக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் கிரையம் வாங்கிய சொத்து 7100 சதுரடி என்பதால் அது அனைத்து எனக்கு சொந்தம் என்பதற்காக மொத்த சொத்திற்காகவும் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். இந்த வழக்கு 07.08.2010 அன்று நான் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 16.07.2010 அன்று 1ம் பிரதிவாதி சங்கர் 2ம் பிரதிவாதிக்கு ஒரு தானசெட்டில்மென்ட் 2400 சதுரடி எழுதி கொடுத்துள்ளார் என்றால் யார் சொத்தையும் யார் பெயருக்கும் செட்டில்மென்ட் எழுதி வைக்கமுடியாது.

தற்போது மொத்த விஸ்தீரணம் 7100 சதுரடியில் தற்போது என் வசம் எவப்வளவு இடம் உள்ளது என்றால் நான் கிரையம் வாங்கிய மொத்த இடமும் என் வசம் தான் உள்ளது. ராமகிருஷ்ண நாயுடு பிரதிவாதிகளை தாவா சொத்தில் இருந்து காலி செய்து கொள்ளும்படி என்னிடம் தெரிவித்த பின்பு தாவா சொத்தின் ஸ்வாதீனத்தை பிரதிவாதிகளிடம் இருந்து கைப்பற்றுவதற்காக நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தம் அற்றவை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக ஸ்வாதீனத்தை ஒப்படைக்கும்படி வழக்கு தொடுக்காமல் நான் கிரையம் வாங்கிய மொத்த சொத்தும் என் வசம் இருப்பது போன்று தாக்கல் செய்துள்ள இந்த தடை உத்தரவு வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**Sd./-R.Rajeswari,**
**Principal District Munsif,**
**Kancheepuram**